# தமிழ்நாடு மாநிலத் தேர்தல் ஆணையம்

எண். 208/2, ஜவஹர்லால் நேரு சாலை, அரும்பாக்கம், சென்னை- 106
தொலைபேசி எண். 2475 3001 நிகரி 2475 3300, 24751870
மின் அஞ்சல் tnsec@tn.nic.in இணையதளம் www.tnsec@tn.nic.in

---

## செய்தி வெளியீடு

**செய்தி வெளியீடு எண். 11 /2011** **நாள். 23.09.2011**

**உள்ளாட்சித் தேர்தல் – திருநங்கையர்கள் விருப்ப உரிமை அடிப்படையில் பாலின பதிவுகளை செய்யலாம்.**

**************

தமிழ்நாட்டில், அக்டோபர் மாதம் நடைபெற உள்ள சாதாரண உள்ளாட்சித் தேர்தலில் வேட்பாளர்களாக போட்டியிட வேட்பு மனுத்தாக்கல் செய்யும் பணி தொடங்கி நடைபெற்று வருகிறது. வேட்பாளர்களாக போட்டியிடும் அடிப்படை உரிமையை பயன்படுத்தி திருநங்கையர்களும் தேர்தல்களில் வேட்பாளர்களாக போட்டியிட்டு வருகிறார்கள்.

நடைபெற உள்ள உள்ளாட்சித் தேர்தல்களில் பெண்களுக்காக ஒதுக்கீடு செய்யப்பட்ட பதவியிடத்திற்கு திருநங்கையர்கள் வேட்பு மனுத்தாக்கல் செய்யும் போது, வாக்காளர் பட்டியல்களில் உள்ள திருநங்கையர்களின் பாலினப்பதிவுகளைக் கொண்டு முடிவு செய்வதை தவிர்த்து, திருநங்கையர்களின் விருப்ப உரிமை அடிப்படையில் முடிவு செய்ய மாநிலத்தேர்தல் ஆணையம் அறிவுறுத்தியுள்ளது.

மேலும், ஒரு குறிப்பிட்ட பிரிவினைச் சார்ந்த அதாவது ஆதிதிராவிடர் / பழங்குடியினர் பெண்களுக்கு வேட்பாளர் பதவியிடம் ஒதுக்கீடு செய்யப்பட்டு இருந்தால், அவர் அந்த குறிப்பிட்ட பிரிவினரைச் சார்ந்தவராக இருக்க வேண்டும் எனவும் தேர்தல் அலுவலர்களுக்கு மாநிலத் தேர்தல் ஆணையம் அறிவுரை வழங்கியுள்ளது.

(தமிழ்நாடு மாநிலத் தேர்தல் ஆணைய ஆணைப்படி)

(ஒம்) லோ.கிருஷ்ணமூர்த்தி,
மக்கள் தொடர்பு அலுவலர்